பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

06 04 2025 **SUNDAY** 12 40 **PM**

*<u>யதலைப்புச் செய்திகள்</u>*

1. தொழில்நுட்பத்தையும், பாரம்பரியத்தையும் ஒன்றிணைக்கும் வகையில் பாம்பன் ரயில் பாலம் கட்டப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. கால்நடைகளுக்கான தீவன உற்பத்தியில் தற்சார்பு நிலையை எட்டுவதற்கான தீர்வுகள் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அத்துறைக்கான மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன்சிங் வலியுறுத்தியுள்ளார்

3. நாடுமுழுவதும் பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ஜுவல் ஓரம் தெரிவித்துள்ளார்.

4. உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் நாட்டிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Abhinash Jamwal** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

**>>>>><<<<<**

தொழில்நுட்பத்தையும், பாரம்பரியத்தையும் ஒன்றிணைக்கும் வகையில் பாம்பன் ரயில் பாலம் கட்டப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ராமேஸ்வரத்தில் சற்றுமுன் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாம்பன் ரயில் பாலம் மற்றும் 8 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

தமிழில் வணக்கம் என்று கூறி தமது உரையைத் தொடங்கிய பிரதமர், நாட்டின் பொறியியல் நிபுணத்துவத்திற்கு இதுவொரு சான்றாக அமைந்துள்ளது என்று பெருமிதம் தெரிவித்தார்.

முன்னதாக, ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலுக்குச் சென்று பிரதமர் வழிபாடு செய்தார்.

இலங்கையில் தனது பயணத்தை முடித்துக் கொண்டு மண்டபம் வந்தடைந்த பிரதமரை, தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி, மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், இணையமைச்சர் திரு. எல். முருகன், தமிழக அமைச்சர்கள் திரு. தங்கம் தென்னரசு, திரு. ராஜ கண்ணப்பன், மாநில பிஜேபி தலைவர் திரு. அண்ணாமலை மற்றும் கட்சியின் மூத்த நிர்வாகிகள் வரவேற்றனர்.

முன்னதாக, இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள், இருநாடுகளுக்கு இடையேயான நட்புறவுக்கு உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், அனுராதபுரத்தில் புதிய ரயில்வே திட்டங்களை அந்நாட்டு அதிபர் திரு. அனுரகுமார திசநாயகே-வுடன் இணைந்து திறந்து வைத்தார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு மேம்பாட்டு திட்டங்களுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

முன்னதாக, புத்த மதத்தின் மிகச் சிறப்பு வாய்ந்த ஸ்தலங்களில் ஒன்றான ஜெயஸ்ரீ மகாபோதியில் வழிபாடு செய்த பிரதமர், இந்த புனித தலம் அமைதி, ஞானம் மற்றும் ஆன்மிகத்தின் அடையாளமாக திகழ்கிறது என்று தெரிவித்தார்.

புத்தபெருமானின் போதனைகள் நம் அனைவருக்கும் வழிகாட்டியாக திகழ்கிறது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

**>>>>><<<<<**

நானோ யூரியா மற்றும் நானோ **DAP** உரங்கள் சர்வதேச அளவில் இந்தியாவின் மதிப்பை உயர்த்தியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம், காந்திநகரில் நடைபெற்ற **IFFCO** நிறுவனத்தின் பொன்விழா ஆண்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், நானோ உரத் தயாரிப்பில் இந்நிறுவனம் தொடர்ந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

உர உற்பத்தியில் நவீன ஆய்வகங்கள் மூலம் பல்வேறு பரிசோதனைகளை நடத்தியுள்ளதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

**>>>>><<<<<**

நாடுமுழுவதும் பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ஜுவல் ஓரம் தெரிவித்துள்ளார்.

ஒடிசா மாநிலம், சுந்தர்கர் நகரில் இரண்டு நாள் மருத்துவ முகாமை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

2047ஆம் ஆண்டிற்குள் **Sickle Cell** எனப்படும் ரத்தசோகை நோயை முற்றிலும் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதற்கென, 2023ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தேசிய ரத்தசோகை நோய் ஒழிப்பு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

ரத்தசோகை தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்கான விரிவான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

கால்நடைகளுக்கான தீவன உற்பத்தியில் தற்சார்பு நிலையை எட்டுவதற்கான தீர்வுகள் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அத்துறைக்கான மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன்சிங் வலியுறுத்தியுள்ளார்.

உத்தரபிரதேசம், ஜான்சியில் உள்ள இந்திய புல்வெளி தீவன ஆராய்ச்சி நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வு நடவடிக்கைகளை அவர் பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டில் உள்ள தரிசி நிலங்களை பயன்படுத்துவதன் மூலம் பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்று கூறினார்.

தீவன உற்பத்தியை அதிகரிப்பதற்கு நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

ஸ்ரீராமபிரான் அவதரித்த தினமான ராமநவமி இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், நம் அனைவரின் வளர்ச்சிக்கும் ஸ்ரீராமரின் போதனைகள் வழிகாட்டியாக உள்ளது என்றும், அதனை நாம் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ராமநவமி அன்று ராமேஸ்வரத்தில் வழிபாடு செய்வது தமக்கு மனநிறைவை அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளையொட்டி, அயோத்தியில் உள்ள ஸ்ரீராமர் கோவில் வண்ண மலர்கள் மற்றும் மின்அலங்கார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

இக்கோவிலில் சிறப்பு பூஜைகள் மற்றும் பிரார்த்தனைகளும் நடைபெற்று வருகின்றன.

பக்தர்கள் எவ்வித சிரமும் இன்றி வழிபாடு செய்யும் வகையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாடுமுழுவதிலுமிருந்து ஏராளமான பக்தர்கள் வந்தவண்ணம் உள்ளதை அடுத்து விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ்வதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

நீலகிரி மாவட்டம், உதகையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், 130 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 56 புதிய திட்டப் பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டி பேசினார்.

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் நாட்டிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்காக மாநில அரசு ஏராளமான திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் 15 ஆயிரத்து 634 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் அவர் வழங்கினார்.

முன்னதாக, 144 கோடி ரூபாய் செலவில் 200 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

**>>>>><<<<<**

பிஜேபி-யின் 45வது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, சமூகவலைதளத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில், நாட்டின் வளர்ச்சிக்காகவும், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற கனவை நனவாக்கும் வகையிலும் உறுதியுடன் பணியாற்றுவதற்கும் இந்த தினம் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட தொண்டர்களுக்கு தமது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த தினத்தை ஒட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் விடுத்துள்ள செய்தியில் நாட்டு மக்களின் முன்னேற்றத்தையும் தேசிய ஒற்றுமையையும் முன்நிறுத்தி பிஜேபி 1980ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்களுக்கு சேவையாற்றுவதில் முழுமையான ஈடுபாட்டுடன் செயல்பட இன்னுயிரை நீத்த முன்னாள் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளை நினைவில் கொண்டு கட்சியின் வளர்ச்சிக்காக பாடுபடுவோம் என்று அமைச்சர் அதில் தெரிவித்துள்ளார்.

**>>>>><<<<<**

இஸ்ரேல் சென்றுள்ள இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு, கைது செய்யப்பட்டுள்ளது ஏற்கமுடியாத செயல் என்று இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் திரு. **David Lammy** தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இஸ்ரேல் குடியுரிமை அதிகாரிகள் வெளியிட்ட அறிக்கையில், அந்நாட்டுக்கு எதிரான கருத்துக்களை பரப்பும் நோக்கில் வந்துள்ள இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக தெளிவுபடுத்தியுள்ளது.

**>>>>><<<<<**

பல்வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீத வரியை வசூலிக்கும் நடவடிக்கையை அமெரிக்க அரசு தொடங்கியுள்ளது. இதன்படி, ஆஸ்திரேலியா, பிரிட்டன், கொலம்பியா, அர்ஜென்டினா, எகிப்து மற்றும் சவுதி அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது இந்த இறக்குமதி வரி விதிக்கப்படுகிறது குறிப்பிடத்தக்கது.

**>>>>><<<<<**

மேற்கு-ராஜஸ்தான், சௌராஷ்ட்ரா மற்றும் கட்ச் பகுதிகளில் இன்று கடும் வெப்பஅலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், ஹிமாச்சலப்பிரதேசம், கிழக்கு ராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்களில் ஓரிரு இடங்களில் வெப்பஅலை வீசக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, அந்தமான் நிகோபார் தீவுகள், மாஹே, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Abhinash Jamwal** வெள்ளிப்பதக்கம் வென்றார். பிரேஸிலில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார். இப்போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**>>>>><<<<<**

ஐபி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஹைதராபாத் - குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி ஹைதராபாதில் இன்றிரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**>>>>>end<<<<<**